# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2075/50 - 2018 ජුනි මස 14 වැනි බ්‍රහස්පතින්දා - 2018.06.14

*2075/50 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு யூன் மாதம் 14 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

### உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள்

***(262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 66அ(1) (அ) என்னும் பிரிவின் கீழ் பலாங்கொடை நகர சபையின் உறுப்பினர் ஒருவரின் பதவியிலான வெற்றிடத்தை நிரப்புதல்***

பலாங்கொடை நகர சபையின் உறுப்பினர் ஒருவரின் பதவி, இறப்பெய்தியமை காரணமாக வெற்றிடமாயிருக்கின்றதாதலாலும் ;

மேற்குறித்த கட்டளைச் சட்டத்தின் 66அ(1)(அ) ஆம் பிரிவின் கீழ், பலாங்கொடை நகர சபையின் 10 ஆம் இலக்க எல்லெபொல வட்டாரத்திற்கு தெரிவு செய்யப்பட்ட சுகத் இந்திரஜித் வடுதுரகே என்பவர் அங்கம் வகிக்கின்ற ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன என்ற அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியின் செயலாளர் முப்பது (30) நாட் காலக்கெடுவுக்குள் உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் (262 ஆம் அத்தியாயம்) 9 ஆம் பிரிவின்கீழ் தகைமையுடைய வேட்பாளரொருவராக, உறுப்பினரொருவராக தேர்ந்தெடுக்கப்பட்டவரென வெளிப்படுத்தப்பட வேண்டியவரும் அக்கட்சியைச் சேர்ந்தவருமான பலாங்கொடை நகர சபையின் 10 ஆம் இலக்க எல்லெபொல வட்டாரத்தின் உறுப்பினர் தொடர்பாக தீர்மானிக்குமாறு என்னால் பணிக்கப்பட்டுள்ளாராதலாலும் ;

மேலே கூறப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியின் செயலாளரினால் அவ்வெற்றிடத்தை நிரப்புவதற்காக ஏகநாயக்க ராஜபக்ஷ பஸ்நாயக்க முதியன்சேலாகே அகில சாலிய எல்லாவல என்பவரைப் பெயர் குறித்து நியமிக்கும் தமது முடிவினை அறிவித்துள்ளாராதலாலும் ;

இப்போது பலாங்கொடை நகர சபையின் தெரிவத்தாட்சி அலுவலர் ரவீந்திர சுபாஷண வெதகே ஆகிய நான், உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் (262 ஆம் அத்தியாயம்) 66அ(1)(அ) என்னும் பிரிவின் நியதிகளின்படி செயற்பட்டு ஏகநாயக்க ராஜபக்ஷ பஸ்நாயக்க முதியன்சேலாகே அகில சாலிய எல்லாவல என்பவர் பலாங்கொடை நகர சபையின் 10 ஆம் இலக்க எல்லெபொல வட்டாரத்தின் உறுப்பினர் ஒருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

ரவீந்திர சுபாஷண வெதகே,
தெரிவத்தாட்சி அலுவலர்,
பலாங்கொடை நகர சபை.

மாவட்டத் தேர்தல்கள் அலுவலகம்,
இரத்தினபுரி,
2018, யூன் 13.

06-1087